விடுதலைப் போராட்டத்தில் உயிர்நீத்த தியாகிகளுக்கு மௌன அஞ்சலி. 229

திரு. எல். இளையபெருமாள்: இங்கேயே கட்சித் தலைவர்களைக் கேட்டுக் கொண்டு முடிவு எடுக்கவேண்டுமென்றுக் கேட்டுக் கொள்கிறேன். நான் அரசையும் எதிர்க்கட்சிகளையும் கேட்டுக் கொ . கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: நாம் அங்கே போகலாம் என்றுதான் சொன்னோம். ஆனால் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்களும் மற்றவர்களும் இங்கேயே வைத்துக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். இரண்டு நிமிடம் மவுனமாக எழுந்திருப்பதுபற்றிச் சொன்னார்கள்.

திரு. கூ. பாலன்: தலைவர்கள் வந்தவுடன் முடிவு செய்யலாம்.

3. வினாக்கள்— விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்

கல்ராயன் மலைப் பகுதியில் நீர்வீழ்ச்சியிலிருந்து மின் உற்பத்தி

*வினா எண். 10!—திரு. சோ. கலிதீர்த்தான்: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்வராயன் மலைப்பகுதியில் உள்ள நீர்வீழ்ச்சியிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யும் செயற்குறிப்பு ஏதும் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆமெனில், எப்போது பணித் துவக்கப்படும்?

(இ) அதற்கு ஆகும் உத்தேசச் செலவுத் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ), (ஆ) மற்றும் (இ): தென் ஆற்காடு மாவட்டத்தில் உள்ள கல்வராயன் மலைப் பகுதியில் உள்ள நீர்வீழ்ச்சியிலிருந்து மின்சாரம் உற்பத்திச் செய்வதற்கான சாத்தியக் கூறுகள் மின்வாரியத்தால் ஆராயப்படுகின்றன. ஆய்வுக்குப்பின் விரிவான அறிக்கை, திட்ட மதிப்பீடு ஆகியவை தயாரிக்கப்படும்.

திரு. சோ. கலிதீர்த்தான்: பேரவைத் தலைவரவர்களே, மின்சாரம் பற்றாக்குறையாக இருக்கின்ற இந்தத் தருணத்திலே இந்தத் திட்டத்தை விரிவாகச் செயல்படுத்தினால் மிகவும் நல்ல தொரு திட்டமாக இருக்கும் என்பதைக் கருதி, இதை நிறை வேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே நம்முடைய பற்றாக்குறையைப் பார்க்கிறபொழுது இந்தப்

போல இன்னும் பல திட்டங்கள் நமக்குத் தேவை. இந்தத் திட்டத்தின் மூலம் 20 மெகாவாட் கிடைக்கும். இருந்தாலும் இந்தத் திட்டத்தை விரைவு படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு தலைவரவர்களே, இந்த மலைப் பகுதியில் நீர்மின்சாரம் தயாரிக்கும் திட்டம் தமிழகத்தில் எங்கெங்கு இப்பொழுது ஆய்வில் உள்ளது என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, நாளையதினம் மின்வாரிய நிதிநிலை அறிக்கை விவாதத்திற்கு வரவிருக்கிறது. அதிலே இவைகளெல்லாம் தெளிவாக விளக்கப்படும்.

திரு. எஸ். சிவராமன்: மாண்புமிகு தலைவரவர்களே, கல்வராயன் மலையில் ஆத்தூர் பக்கத்தில் உள்ள நீர்வீழ்ச்சியில், எப்படிப்பட்ட வறட்சிக் காலமாக இருந்தாலும் நீர் ஊறிக் கொண்டிருக்கிறது. அங்கே நீர் வற்றாத ஒரு அருவி இருக்கிறது. இது சம்பந்தமாக ''தின மலர்'' பத்திரிகையில் ஒரு ஆர்ட்டிகிள் எழுதியிருக்கிறார்கள். அது சம்பந்தமாக அரசுக்குத் தெரியுமா? அதிலேயிருந்து மின்சார உற்பத்தி செய்வதற்கு நம்முடைய அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, எங்கெங்கு நீர்வீழ்ச்சிகள் இருந்தாலும் அங்கெல்லாம் நிச்சயமாக ஆராய்வோம்.

அனைத்திந்திய மின் விசை விநியோக இணையம்

*வினா எண் 102—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) அனைத்திந்திய மின்விசை விநியோக இணையம் ஏற்படுத்துவதுபற்றி மைய அரசு மாநில அரசின் ஆலோசனைக் கேட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) மற்றும் (ஆ) டெல்லியில் நடந்த மின்துறை அமைச்சர்கள் மாநாட்டில் இது கொள்கையளவில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.